வெளியீடு எண்.

# திருபுவனத் தலவரலாறு



கோயில் தோற்றம்

தருமபுர ஆதீனம் (1972) விலை. 45 காசு



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருபுவனத் தல வரலாறு

---

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

திருவுள்ளக் குறிப்பின்படி

திருபுவனம்

ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது

1972

முதற் பதிப்பு 1943
இரண்டாம் பதிப்பு 1948
மூன்றாம் பதிப்பு 1958
நான்காம் பதிப்பு 1972

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருபுவனத் தல வரலாறு

## 1. தலமும் இருப்பிடமும்

பொன்னிமாநதி புனல்மல்கி வளம் கொழிக்கும் புண்ணியம் பெற்றது சோழநாடு. இந்நாட்டில் சோழ மன்னர்களால் எடுப்பிக்கப் பெற்ற கோயில்கள் மிகப் பலவாகும். அவைகளுள் சில அம்மன்னர்களது பெருமைக்கும், புகழுக்கும், சிற்ப நுணுக்கத்திற்கும் நிலைக்களமாய் இன்றும் விளங்குகின்றன. அங்ஙனம் விளங்குவனவற்றுள் திருபுவனம் திருக்கோயிலும் ஒன்றாகும்.

இத்தலம் தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுக்காவில் திருவிடைமருதூர் இரயில்வே நிலையத்திற்கு மேற்கில் ஒரு கல் தொலைவிலுள்ளது.

## 2. தலப் பெயர்கள்

திரிபுவன வீரபுரம் என்பதே இத்தலத்தின் பழய பெயராகும். இப்பெயரே இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இப்பெயர் இது பொழுது திருபுவனம் என்று மருவி வழங்கப்படுகிறது.

இதுவேயன்றி வில்வவனம், திரிபுரவனம், தேவக்ஷேத்திரம், நிம்பாண்டியக்ஷேத்திரம் என்ற வேறு பல பெயர்களும் இத் தலத்திற்கு உள்ளன.

## 3. கோயிலமைப்பு

திருக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி இருக்கின்றது. இதற்கு முதற் கோபுரமாகிய திருத்தோரணத்திருவாயில், இரண்டாங் கோபுரமாகிய திருமாளிகைத்திருவாயில், அர்த்தமண்டபத்தின் திருவாயிலாகிய திருவணுக்கன் திருவாயில் என்னும் மூன்று முக்கியவாயில்கள் இருக்கின்றன. எனவே தெய்வப்பாக்கிழாராகிய சேக்கிழார் பெருமானல் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப்பெற்றுள்ள மூன்று திருவாயில்களும் இக்கோயிலுக்கு அமைந்திருக்கும் பெருஞ்சிறப்பு பாராட்டற்குரியதாகும். அவைகளன்றி அர்த்தமண்டபத்தின் தென்பகுதியில் ஒன்றும், வடபகுதியில் ஒன்றும் ஆக இரு வாயில்களும் பிறவும் இருக்கின்றன. முதற் கோபுரம் ஏழு நிலைகளுடனும், இரண்டாங் கோபுரம் மூன்று நிலைகளுடனும் கூடி வாயில்களை அழகுபெறச் செய்கின்றன.

இக் கோயிலுக்கு இரண்டு திருச்சுற்றுலைகள் (பிராகாரங்கள்) இருக்கின்றன. இவற்றுள் முதல் திருச்சுற்றுலையைச் சூழ்ந்து திருச்சுற்றுமாளிகை ஒன்று இருக்கின்றது. இம் முதல் திருச்சுற்றுலையின் நடுப்பகுதியில்

நடுக்கந்தீர்த்த பெருமான் எழுந்தருளி யிருக்கும் கோயில் இருக்கின்றது. கருப்ப இல் (Central-shrine) அர்த்த மண்டபம், மஹா மண்டபம் என மூன்று பகுதிகளை யுடையது. கருப்ப இல்லின் விமானம் தஞ்சை இராஜராஜேச்சரம், கங்கை கொண்ட சோழேச்சரம் இவைகளின் விமானங்களையே ஒத்தது ஆகும். இவ்விமானம் அறிவானந்த வடிவமானது என்று இவ்வூர்த் தலபுராணங் கூறுகின்றது.

முதல் சுற்றுலையின் வடபகுதியில் அம்மையார் கோயிலும், அதன் கீழ்பால் சரபேசர் திருக்கோயிலும் இருக்கின்றன.

இரண்டாம் திருச்சுற்றுலையில் வசந்த மண்டபமும், யாகசாலையும் எழில்பெற அமைந்திருக்கின்றன.

## 4. மூர்த்திகள்

மூலஸ்தானத்து எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பெயர் **ஸ்ரீ கம்பஹரேசுவரர்.** தமிழில் நடுக்கம் தீர்த்தபெருமான் என்பது பொருள். **திருபுவனச்சர முடைய மகாதேவர்** என்பது இக் கோயில் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் திருப்பெயராகும். இத் தலத்து அம்மையாருக்கு **ஸ்ரீ அறம்வளர்த்தநாயகியார்** என்று தமிழிலும், தர்மஸம்வர்த்தனி என்று வடமொழியிலும் பெயர்கள் வழங்குகின்றன பிரகலாதன், திருமால், தேவர், மனிதர் முதலாயினோர்க்கு விளங்

கம்பத்தினை (நடுக்கத்தை=அபாயத்தை) நீக்கியருளிய தால் இத்தலத்துப் பெருமானுக்கு இப்பெயர் ஏற்பட்டது.

இரணியனது குருதியைப் பருகிய நரசிம்மம் மதி மயங்கி, உலகத்தை அழிக்கத் தொடங்கியகாலை இத் தலத்துப் பெருமான் சரபப்பறவை வடிவங்கொண்டு அதன் கொடுமையை அடக்கியதால் சரபேச்சரர் என்ற பெயரும் இம் மூர்த்திக்கு உண்டு. அவருக்குத் தனிக் கோயிலும் இருக்கிறது.

## 5. தலப் பெருமை

அசுவக்ரீவன், விருஷபக்ரீவன், வியாளக்ரீவன், பிரமன் முதலிய தேவர்கள், இலக்குமி, வரகுணபாண்டியன் ஆகியோர்களது நடுக்கத்தைத் தீர்த்து அருள் பாலித்தது, இராஜராஜேசுவரன் தன் வெற்றிக்கறிகுறியாக எடுப்பிக்கப்பெற்றது. நரசிம்ம வடிவு கொண்டு உலகை நடுங்கச் செய்த விஷ்ணுவின் அகங்காரத்தை அடக்கியது. சுகோஷன் என்னும் வேடனுக்கு அருள் புரிந்தது. வருணன் பூசித்தது. சித்ரரதன் வழிபட்டு அருள்பெற்றது.

## 6. புராண வரலாறு

**சரபமூர்த்தி :-** இரணியன், இரணியாக்கன், என்ற இரண்டு அசுரர்கள் (அண்ணன் தம்பியர்) பரமனை நோக்கிக் கடுந்தவம் இயற்றி அரிய பெரிய வரங்களைப்

பெற்றனர். அவர்களில் மூத்தவனுகிய இரணியன், தேவர், மனிதர், விலங்கு முதலிய யாவராலும் எத்தகைய ஆயுதத்தாலும் அகம், புறம் ஈரிடத்தினும் பகல், இரவு என்ற இருவேளையிலும் சாகாத வரம் வேண்டுமென்று வேண்டிப்பெற்ருன். அதனுல் தன்னை எதிர்ப்பார் ஒருவருமின்றிப் பெருஞ்செருக்குற்ருன். அச்செருக்கு முதிர்ந்து இறுதியில் தானே பிரமம் என்றும், தன்னை ஒழிய யாரும் எவரையும் வழிபடலாகாது என்றும் அனைவருக்கும் ஆணையிட்டான். அவ்வாணையைக் கடந்தார் யாவரே எனினும் அவர்களுக்குக் கடுந் தண்டனையும் இட்டுவந்தான்.

இங்ஙனம் நிகழும் நாளில் அவனுக்குப் பிரகலாதன் என்ருெரு புண்ணியப் புதல்வன் பிறந்தான். அவன் தாயின் வயிற்றுலிருக்கும்போதே நாரத முனிவரது உபதேசத்தால் திருமால்பால் பேரன்புடையவனுயினுன். பிறந்து மொழிபயின்று பள்ளியில் வைக்கப்பெற்றபோது அவனுடைய ஆசிரியன் ‘ ஓம் நமோ இரண்ய ’ என்று கூறும்படி ஏவினுன். சிறுவன் அதனை மறுத்து ‘ ஓம் நமோ நாராயண ’ என்ருன். ஆசிரியன் பெரிதும் அஞ்சி அவ்வாறு கூருெணுதென நயத்தாலும், பயத்தாலும் கூறிய கூற்றுக்களை எல்லாம் மறுத்து வெளிப்படை யாகத் திருமாலின் பக்தியுடையவனுக அச் சிறுவன் விளங்கினுன். அதனை உணர்ந்த இரணியன் சிறுவனை அழைத்துப் பலவிதமாக அச்சுறுத்தியும் சிறுவன், தந்தை யின் கருத்துக்கு இணங்கினுனல்லன். இரணியன் பெருங்கோபங்கொண்டு பல்லாற்ருனும் சிறுவனைக்

கொல்ல முயன்றான் திருமாலின் அருளால் சிறுவன் இடையூறின்றி விளங்கினன்.

தன் தீய சினத்தை அடக்கலாற்றா இரணியன் ஒரு நாள் சிறுவனையழைத்து "ஏடா சிறுவ! நீ சொல்லும் நாராயணன் என்பவன் யாண்டுளன்? என் தம்பியைக் கொன்ற அக்கள்வன் என் சினத்துக்கு அஞ்சி எங்கோ கரந்து உறைகின்றான். அவனும் ஒரு தெய்வமா? நீ அவனை எனக்குக் காட்டுதி. உன்கண்முன் அவனைக் கொன்று நானே கடவுள் என்பதை உனக்கு மெய்ப்பிப்பேன்" என்றான். சிறுவன் "தந்தையே! நாராயணன் தூணிலும் உளன்; துரும்பிலும் உளன்" என்றான். "எங்கே அவன் தெய்வமானால் இத் தூணி லிருந்து அவன் வெளி வரட்டும்" என்று ஒரு தூணை எட்டி உதைத்தான். உடனே தூண் பிளந்து நரசிம்ம வடிவாய் வெளித் தோன்றினார் நாராயணர். இரணியன் அடங்காச்சினமூண்டுதன் தம்பியைக்கொன்ற பழிக்குப் பழி வாங்குவதாகக் கூறி எதிர்த்தான். திருமால் அவனைப் பற்றிச் சென்று வாயிற்படியில் வீற்றிருந்து அவனை மடிமேல் வைத்துத் தம்கூரிய கை நகங்களால் அவன் வயிற்றைக் கிழித்துக் கொன்று அவனது குருதி முழுவதையும் பருகினார்.

தான் பிரமம் என்று பேசிப் பொல்லாங்கு செய்து திரிந்த இரணியன்மேல் திருமால் கொண்டிருந்த சினத்தீ அவனைக் கொன்ற பின்னும் குறைந்திலது. அவனது குருதியாகிய நெய்யால் கொழுந்துவிட்டு வளர்ந்தது.

அதனால் திருமால் மதிமயங்கி உலகத்தையே அழிக்கத் தொடங்கினார். இரணியனது குருதியே அதனை உண்ட திருமாலின் மதியை மயக்கி இத்தகைய கொடுமை செய்வித்தது எனின் அவன் எத்தகைய கொடியனாய் இருந்து இருப்பான். பிரகலாதனும் திருமாலும் பலவாறு புகழ்ந்து ஆற்றியும் கோபம் தணிந்திலது.

அதனைக்கண்ட பிரமன் முதலிய தேவர்கள் தேவ தேவராகிய திருநீலகண்டனிடம் புகலடைந்து முறையிட்டனர் சிவபெருமான் சரபப்பறவை வடிவுகொண்டு நரசிம்மத்தை நோக்கிச் சென்றார். சரபத்தினைக்கண்ட நரசிம்மம் அஞ்சியோடத் தொடங்கிற்று. துரத்தச் சென்ற சரபம் தன்மீது பட்டவுடனே நரசிம்மம் தன் கொடுமை அடங்கப்பெற்று அமைதியுற்றது. தன் இயல்பாய நல்லுணர்வைத் திருமால் பெற்றார்.

தம் தவறுதலை உணர்ந்த திருமாலும், ஏனைய தேவர்களும் சிவபெருமானைப் புகழ்ந்து பாடி அருள் பெற்றனர். பிரகலாதன், திருமால், தேவர். மனிதர் முதலிய யாவரது பயமும் நீங்கிற்று. தங்களுக்கு விளைந்த கம்பத்தினை (நடுக்கத்தை = பயத்தை) நீக்கியருளியதால் அத்தலத்திலே சிவபெருமானுக்குக் கம்பஹரேசுரர் (நடுக்கந் தவிர்த்த பெருமான்) என்ற திருப்பெயர் உண்டாக வேண்டுமென்றும், அங்கே அவரை அடைந்து வணங்கினரெல்லாரும் நடுக்கந் தீர்ந்து நலமெய்தச் சரபவடிவாக வீற்றிருந்து அருள வேண்டுமென்றும் வரம் பெற்றனர்.

அதனால் இத்தலத்தில் சிவபெருமானுக்குக் கம்பஹரேஸ்வரர் என்ற திருப்பெயர் ஏற்பட்டது. சரப மூர்த்தியும் ஆண்டு வீற்றிருந்து தம்மை வழிபடுவோர்க்கு அருள் செய்கின்றார்.

**திரிபுரர் :-** அசுவக்கிரீவன், விருஷபக்கிரீவன், வியாளக்கிரீவன் என்ற மூன்று அசுரர்கள் இருந்தார்கள். அவர்கள் தவமுயன்று பெருவலிமை உடையவராவதன் முன்னமே அவர்களை அழித்துவிட வேண்டும் என்று கருதிய தேவர்கள் சேனையோடு சென்று கடும்போர் விளைத்தனர். அஞ்சாது நெடுங்காலம் போர்புரிந்த அசுரர்கள் இனித் தாம் உயிர்தப்ப இயலாதென்று உணர்ந்து மாயையால் மறைந்து, மண்ணுலகத்தை அடைந்து, மாறுவேடத்தோடு திரிந்தனர்.

மண்ணுலகத்தில் காடுகளிலும், மலைகளிலும் திரிகின்றபொழுது வில்வமரம் அடர்ந்த ஒரு காட்டினையும், அதன் நடுவே ஒரு இலிங்கத்தினையும் கண்டனர். உயிர் பிழைத்தல் அரிதான நிலையிலிருந்த அசுரர்கள் அப்பெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர்: இறைவன் அஞ்சேலென்றருளி அவர்களது நடுக்கத்தை விலக்கி அருளினார். "வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும்" என்பதை நன் குணர்ந்த அசுரர்கள் இறைவனைக் குறித்து அருந்தவம் ஆற்றினர். அவர்களது தவத்துக்கு இரங்கி, சிவபெருமான் காட்சியருளி, வேண்டும் வரங்களை வேண்டுமாறு பணித்தருளினார்.

அசுரர்கள் "எம் இறைவனே எங்கள் பகைவராகிய அமரரால் அடக்கப்பட்டு யாம் பெரிதும் துன்புற்றோம். உயிருக்கு அஞ்சினோம். எங்கள் அச்சத்தைத்தவிர்த்த தேவரீரே அவர்களை யாங்கள் அடக்கும் ஆற்றலும் அருளவேண்டும். ஆதலால் தேவராலும் யாவராலும் அழியாதவையும், பொன், வெள்ளி, இரும்பு, என்பவற்றால் தனித்தனியாகியவையும், எங்கள் விருப்பம் போல் எங்கு வேண்டுமாயினும் உலவித் திரிபவையும் ஆகிய மூன்று கோட்டைகளை எங்களுக்கு அருள வேண்டும்" என்று வேண்டினர். இறைவன் அவ்வாறே அருள் பாலித்தார்.

அருள்பெற்ற அசுரர்கள் அன்று முதலாகத் தேவர்களையும், ஏனையோர்களையும் துன்புறுத்தத் தலைப்பட்டனர். பிரமன், திருமால் முதலிய தேவர்களும் அவர்களை எதிர்த்து ஆற்றலழிந்து அடங்கினர். இன்னல் பொறுக்க இயலாது அஞ்சினோர்க்கு அரணாகிய அரனிடம் முற்கூறிய வில்வ வனத்திற் சரண்புகுந்து குறையிரந்து முறையிட்டனர். சார்ந்தோரைத் தாங்கும் தயாநிதியாகிய சிவபெருமான் அவர்களுக்குப் புகல் அருளித் திரிபுரத்து அசுரர்களை அழிக்கப்புறப்பட்டார்.

அதுகாலை சூரிய சந்திரர்களே சக்கரங்களாகப் பூமியே தேராயமைந்தது. மேரு மலையே வில்லாகவும், வாசுகி என்ற பெரும் பாம்பே நாணாகவும் அமைந்தன. திருமால் அம்பாகவும், அக்கினிதேவன் முனையாகவும், வாயுதேவன் இறகாகவும் அமைந்தனர்.

இத்தகைய போர்த் துணைகளோடு இறைவன் புறப்படுங்காலை தேவர்கள் தாம் இறைவனுக்குப் போர்த் துணையாய் அமைந்ததைக் கருதிச் செருக்குற்றனர். இறைவன் அவர்கள் செருக்கை அழிக்கக் கருதினன். தேரின்மேல் கால் வைத்தவுடன் அச்சு முரிந்தது. உடனே திருமால் விடைவடிவாய் அன்போடு தாங்கினார். இறைவன் நகைத்தான். முப்புரமும் அழிந்தன. தேவர்கள் நடுக்கம் ஒழிந்தது.

திரிபுரர்கள் தங்கித் தவங்கிடந்த தலமாதலால் இத் தலம் **திரிபுரவனம்** எனப் பெயர்பெற்றது.

**சுகோஷன் :-** வேட்டுவ குலத்தில் பிறந்தவன். தனது உடல் வலிமையினாலே வழிப்போக்சர்களை வருத்திப் பொருள் அபகரித்து வாழ்ந்துவந்தான். அவ்வாறிருக்குங் காலத்தில் கர்மடன் என்னும் பிராமணன் எதிர்ப்பட அவனையும் துரத்திச் சென்றான். பிராமணன் மிகவும் பயந்து சிறிதுதூரம் ஓடினன். வேடன் பின் தொடர்ந்து ஓடிவருதலைக் கண்டு சற்று நின்று வேடனைப்பார்த்து "ஏ வேடா! நீ என்னைத் துன்புறுத்தாதே. நான் யாகம் செய்யப் பொருள் வேண்டி சித்திர கீர்த்தி என்னும் அரசனைக் காணச் செல்கின்றேன். ஆதலின் நீ என்னை வருத்தின் பிரமஹத்தி உன்னைப் பற்றும். மேலும் நீ முன் ஜன்மத்தில் பற்பல பாவங்களைச் செய்து இப்பொழுது வேட்டுவகுலத்திற் பிறந்திருக்கின்றாய். இனிமேலாவது இத் தீச்செயலை விட்டுவிடு" என்று கூறினன். உடனே வேடன் அறிவு வந்து வீழ்ந்து வணங்கி "முன்ஜன்மத்தில் எப்பாவம்

செய்தேன். சற்று விளக்கமாகக் கூறியருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். பிராமணன், "சுகோஷா! நீ முதல் ஜன்மத்தில் கௌண்டில்ய கோத்திரத்தில் சம்புகாந்தன் என்னும் பெயருடன் பிராமணனாய்ப் பிறந்தாய். அப்போது அடியார்களையும் சிவசின்னங்களையும் தூஷித்து வந்தாய். மேலும் சிவலிங்கப் பிரதிட்டையின் பொருட்டு உன்னிடம் யாசகத்திற்காக வந்த ஒருவரை மிக நிந்தித்தாய். அதனால் நீ க்ஷயரோகமடைந்து உடல் வாடி இறந்தாய். இப்பொழுது இப் பிறவி பெற்றாய். இதுவே உன் வரலாறு" என்றான், அதனைக் கேட்ட வேடுவன் தான் செய்த பாவத்தை எண்ணி எண்ணி உடல் நடுங்கி மனம் நைந்து "ஐயனே! அடியேன் இனி யாது செய்வேன்; எவ்வாறு நற்கதி பெறுவேன்; உய்யும் வழியில்லையோ? அருள் செய்யும்" என்ன "நீ வில்வாரணியம் சென்று ஸ்ரீ கம்பஹரேசுவரரை வழிபடுக" என்று மொழிந்தான். அவ்வாறே அவ் வேடன் ஸ்ரீ கம்பஹரேசுவரரை வழிபட்டு மறுபிறப்பில் மிதிலைப் பட்டினத்தில் கிருஸவரோமன் என்னும் அரசனாய்ப் பிறந்து சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் பணிகள் புரிந்து பின்னர் முத்தியின்பம் பெற்றான்.

**வரகுணதேவன் :-** இவன் மதுரை மன்னன். வேட்டை விருப்பினால் காட்டிற்குச் சென்று திரும்புங்கால் தேரில்கட்டப்பட்ட குதிரை அக்காட்டில் நித்திரை செய்யும் ஒரு பிராமணனை மிதித்துக் கொன்றுவிட்டது. அப்பாதகத்தால் பிரமகத்தி அரசனைப் பற்றியது. அரசனும் அதனால் மிகத் துன்பமடைந்தான். பற்பல பிராயச்

சித்தங்கள் செய்தும் பயன் அடைந்தானில்லை. பின்னர் ஆலவாயண்ணல் ஆணைப்படி தன்னுடன் போர்புரிய வந்த சோழ அரசனைத் துரத்திக்கொண்டு வருகையில் திருவிடைமருதூர் என்னும் தலத்தின் எல்லையை அடைந்தவுடன் பிரமஹத்தி நீங்கியது. உடனே அரசன் அத்தலத்து இறைவனை வணங்கிப் பல திருப்பணிகள் செய்துகொண்டு சிலகாலம் தங்கி இருந்தான். பிரமஹத்தி அரசனை விட்டகன்றும் அரசனுக்கு அதனால் ஏற்பட்ட நடுக்கம் அகலவில்லை. மழைவிட்டும் தூவானம் விட வில்லை என்பதும் ஓர் பழமொழியன்றோ? அரசன் இந் நடுக்கம் எப்போது அகலும் என்று கவன்றான். திரு விடைமருதூரை விட்டகன்று மேற்கு நோக்கித் தன் நாட்டிற்குப் புறப்பட்டான். இத் (திருபுவனத்)தலத்து எல்லையை யடைந்ததும் அவனுக்கு இருந்த நடுக்கம் (அச்சம்) நீங்கியது. அங்குள்ள வில்வ வனத்திலே உள்ள பெருமானைக் கண்டான், தன் நடுக்கம் தீர்த் தருளிய பெருமான் இவரே எனத் தெரிந்து இங்குத் தங்கிப் பணிகள் பல புரிந்து சென்றான். பாண்டிய மன்னர்களில் முதல் வரகுணன் என வரலாற்றாசிரியர் களால் குறிப்பிடப்பெறும் இவ்வேந்தன் கி. பி. 792 முதல் 835 வரை அரசு புரிந்தவன். சிறந்த சிவபக்தனாக விளங்கிய இவனைப்பற்றிய குறிப்புக்கள் திருவிளையாடற் புராணம், திருவிடைமருதூர்ப் புராணம், திருபுவன மான்மியம், பட்டினத்தடிகளின் மும்மணிக்கோவை, நம்பியாண்டார் நம்பிகளின் கோவில் திருப்பண்ணியர் விருத்தம் முதலிய நூல்களில் காணப்படுகின்றன.

## 7. தீர்த்தங்கள்

**சரப தீர்த்தம் :-** ஸ்ரீ சரபமூர்த்திக்கு எதிரில் இருக்கிறது.

**தேவ தீர்த்தம் :-** ஸ்ரீகம்பஹரேசுவரருக்கு ஈசான்ய திக்கில் உள்ளது. இதற்கு வருண தீர்த்தம் என்ற வேறு பெயரும் உண்டு.

**ஞான தீர்த்தம் :-** தேவதீர்த்தத்துக்குக் கிழ்பால் அரைமைல் தொலைவில் உள்ளது.

**வியாச தீர்த்தம் :-** ஸ்ரீ கம்பஹரேசுவரருக்கு வாயு திக்கில் ஒன்றேகால் மைல் தூரத்தில் இருக்கின்றது.

**பிருகு தீர்த்தம் :-** வியாசதீர்த்தத்துக்குத்தென்பால் முக்கால் மைலில் இருக்கின்றது.

**சித்த தீர்த்தம் :-** பிருகுதீர்த்தத்துக்கு அக்கினி திக்கில் அரைமைலில் உள்ளது.

இத் தீர்த்தங்களில் நீராடிப் பேறு பெற்றோர் வருணன் முதல் பல்லோராவர்.

## 8. தல விருட்சம்

**வில்வம் :-** சுவாமி கோயில் வடக்குப் பிரா காரத்தில் இருக்கின்றது.

## 9. வழிபட்டோர்கள்

அசுவக்கிரீவன், விருஷபக்கிரீவன், வியாளக் கிரீவன், பிரமாதி தேவர்கள், இலக்குமி, வருணன், விஷ்ணு, சித்ரரதன், சுகோஷன், மாந்தாதா, நாரதர், வரகுணன். ராஜராஜன் முதலியோர் வழிபட்டுப் பற்பல பேறுகளைப் பெற்றுள்ளார்கள்

## 10. சுற்றுக்கோயில்கள்

விநாயகர் ஆலயங்களும், ஐயனர், பிடாரி முதலிய கிராம தேவதைகளின் ஆலயங்களும் உள.

## 11. மண்டபங்கள்

**வசந்த மண்டபம் :-** அழகான வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. நாற்புறங்களிலும் இரதத்திற்கு உள்ளது போல கருங்கல்லாலாகிய சக்கரங்கள் அமைந்திருக்கின்றன.

## 12. சிற்பங்கள்

ஆலயத்தில் காணப்படும் உருவங்கள் யாவும் மிக அழகான வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன. சரபர் சந்நிதியிலுள்ள பூதேவி. சீதேவி, உருவங்கள் சிற்ப இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. சோமாஸ்கந்தர் மண்டபத்தின் தென் பகுதியில் பரத நாட்டிய பாவங்கள் அமைய வேலைப்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இதிகாச சம்பந்தமுள்ள பல உரு வங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ராஜராஜேசுவரன்



ஸ்ரீ விநாயகர்



ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

பெருமை விளங்கக் கட்டியது. ஆதலின் சிற்பிகளி னுடைய முழுத்திறனும் தூண்கள், மண்டபங்கள், விமானங்கள் ஒவ்வொன்றிலும் விளங்குவதாக இருக் கின்றன. சுவாமி கோயில் கருப்பக்கிரக விமானம் முழுதும் கருங்கல்லால் ஆக்கப்பட்டது. அதிலுள்ள உருவங்களும் கருங்கற்களாலாயினவே. அக்கருட்பக் கிரகத்தில் சுவாமிக்கு நேராக மேலேஉள்ள தளத்தில் பெரியநாயகர் கோயில் அமைந்திருக்கிறது. அதிலுள்ள திருவுருவம் கருங்கல்லாலாகியதே.

## 13. நித்தியபூஜைகளும் திருவிழாக்களும்

காரண காமிக ஆகமப்படி நாடோறும் ஐந்து கால பூஜைகள் நடைபெறுகின்றன. பங்குனி உத் திரத்தில் பிரமோற்சவம் நடத்தப்படுகின்றது. நிறை பணி, நவராத்திரி, வியதீபாதம் சிறப்பு விழாக்களும் நடைபெறுகின்றன.

விஜயதசமி, சங்கராந்தி, திருவாதிரை போன்ற ஏறுபடிகள் விமரிசையாக நடத்தப்பெறுகின்றன. ஸ்ரீ அறம்வளர்த்த நாயகிக்கு நவராத்திரியில் லக்ஷார்ச் சனையும், பங்குனி உற்சவத்தில் ஸ்ரீ சரபமூர்த்திக்கு லக்ஷார்ச்சனையும் நடைபெறுகின்றன.

## 14. சொத்துக்கள்

நஞ்சையில் சுமார் 870 ஏக்கரும், புஞ்சையில் சுமார் 493 ஏக்கரும், நத்தம் வகையரா 260 ஏக்கரும்

இருக்கின்றன. சர்க்காரில் இருந்து மோகினித்தொகை ரு 4173—5—2 கிடைக்கிறது.

| | ரு — பை. |
|---|---|
| திருவாபரணங்கள் | 18676—10 |
| வெள்ளி ரதம், வெள்ளி வாகனம் | 77206—42 |
| பாத்திரங்கள் | 2948—74 |
| மர வாகனங்கள் | 21265—92 |
| இதர தளவாட வகையரு மைக்செட் வகையரு | 16434—85 |
| தீபம் வகையரு | 1123—21 |
| சோடசோபசாரம் | 10470—71 |
| குடைகள் தேர்சீலை வகையரு | 12116—82 |
| மணிகள் | 60—75 |
| திருவாசிகள் | 19—00 |
| | 160322—54 |

## 15. திருப்பணி

பழுதுபட்டிருந்த இரண்டாங் கோபுரம் புதியதாகக் கட்டி வர்ணம் வைக்கப்பட்டது. மேலே இராச கோபுரம் வெடிப்பேற்பட்டு அபாய நிலையில் இருந்ததைப் பிரித்து எடுத்து மொட்டைக் கோபுரமாக வேலை செய்யப்பட்டிருக்கின்றது. சுவாமி கோயிலினது தெற்கு வடக்கு இருபிராகாரங்களையும் உயர்த்திக்

காங்கிரீட் பரப்பிக் கருங்கல் தளவரிசை போடப் பட்டிருக்கிறது. இரண்டாங் கோபுரத்திற்கும் கீழை இராஜகோபுரத்திற்கும் இடையிலுள்ள நடைப்புக்குத் தள வரிசை செய்யப்பட்டிருக்கின்றது. திருமாளிகைப்பத்தி மண்டபங்களும், திருமடைப்பள்ளியும் பழுதுபார்க்கப் பட்டு வெள்ளை வைக்கப்பட்டிருக்கிறது. நந்தவனம் சீர்செய்து நன்றாகப் பராமரிக்கப்படுகிறது.


சுவாமி கோயில் கருப்பக்கிரக விமானம் பழுது பார்த்து வர்ணம் தீட்டி 1941இல் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அர்த்தமண்டபம், மகாமண்டபம் தளம் முழுவதும் வெள்ளை வைத்துச் செப்பஞ் செய்யப் பட்டது அர்த்தமண்டபத்தில் மையப்பத்தி பிரித்து எடுத்துக் கல்யாணகூட வேலையாகத் தூக்கிக் கட்டி ஜன்னல்களும் வைக்கப்பட்டன.

ஸ்ரீ சரபமூர்த்தி சந்நிதி முன்புறம் இரும்புக் கம்பி அடைப்புக் கதவும் தகரக் கொட்டகையும், ஸ்ரீ அறம் வளர்த்தநாயகி அம்பாள் சன்னிதி முன்புறமும் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி சந்நிதி முன்புறமும் தகரக் கொட்டகையும் ஸ்ரீ உற்சவமூர்த்திகளிருக்கும் மேடைக்கு முன் இரும்புக்கம்பி அடைப்புக்கதவும், ஸ்ரீ நவக்கிரகங்கள் இருக்கும் இடத்தில் சுற்றிலும் கம்பி அடைப்புக்கதவும், ஸ்ரீநாயகர் சந்நிதி முன்புறமும் ஸ்ரீ ஆடிப்பூர அம்பாள் சந்நிதி முன்புறமும் இரும்புத் தள்ளுக்கதவுகளும், ஸ்ரீசரபர் உற்சவமூர்த்தி சந்நிதியில் கம்பிக்கதவும், திருவாபரண அறைக்கு இரும்பு அடைப் புக் கதவும்சுவாமி சந்நிதி மேல்தளத்திற்குப் போகும்


படிக்கட்டு வாசலில் இரும்பு அடைப்புக் கதவும், கீழப்பிராகாரம் வடக்குவாசலுக்கு இரும்புக்கம்பிக் கதவும் மகாமண்டப முன்புறம் இரும்புக்கம்பி அடைப்புக் கதவும், வண்டிகள் போடக் கிழக்குப் பிராகாரத்தில் வடக்கு பக்கத்தில் தகரக் கொட்டகையும் போடப்பட்டிருக்கின்றன. மேலத் திருமாளிகைப் பத்தி பழுதுபார்த்து வெள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. குடிதண்ணீர் வசதிக்காக (தானியங்கி) நீர்க்குழாய் வைக்கப்பட்டிருக்கிறது. அலுவலகம் கட்டிடம் புதிதாகக்கட்டப்பட்டு முன்புறம் தகரக் கொட்டகையும் போடப்பட்டிருக்கிறது. பஞ்சமூர்த்திகள் உற்சவ மண்டபத்திற்கு இரும்பு அடைப்புக் கதவு போடப்பட்டிருக்கின்றன. சரபர் சந்நிதி முன்மண்டபம் கருங்கல் தளவரிசை போடப்பட்டிருக்கிறது; வெளிப் பிராகாரம் இராஜகோபுரம் முதல் இரண்டாம் கோபுரம் வரையிலும் அதன் தென்புறமும் கருங்கல் தளவரிசை போடப்பட்டு இருக்கிறது. வழிபாட்டிற்கு வரும் சேவார்த்திகள் தங்க வசதிக்காகச் சந்நிதியில் ஓய்வு விடுதி ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

சிப்பந்திகள் குடியிருப்புக்கு 8 வீடுகள் புதியதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் இராஜகோபுரம், இரண்டாம்கோபுரம், சுவாமி விமானம், அம்பாள் விமானம், சரபர் விமானம் முதலியன புதுப்பித்து வர்ணம் வைக்கப்பெற்றது.

இரண்டாங் கோபுரவாசல் மேலைத் திருமாளப் பத்திக்கும் இரும்பு அடைப்புக்கதவு போடப்பட்டிருக்



நாகபணீந்த்ராப்ஜினீ



முகபத்ரவேதிகை.

கிறது. ஸ்ரீ சரபர் சந்நிதியில், பித்தளைப்படிகள் போட்டுத் துவாரபாலகர் அமைக்கப்பட்டிருக்கிறது. சீதக்கமங்கலம் கிராமத்தில் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

கும்பாபிஷேகம்;- தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இவ்வாறு திருப்பணிகள் பலவற்றையும் நாளடைவில் செய்து முடித்தும் உயர்ந்த சிற்பங்கள் அனைத்தையும் பாதுகாத்துச் சுதைவேலைகளினால் மீண்டும் கலைவண்ணம் கூட்டியும், சிலமாக இருந்த இராஜகோபுரத்தைப் புத்தம் புதியதாகத் திருத்தியும், இரண்டாம் கோபுரம், சுவாமி விமானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், அம்பிகையின் ஆலயம், சுற்றுக் கோயில்கள், ஸ்ரீ சரபமூர்த்தி கோயில் மண்டபங்கள் முதலிய அனைத்திடங்களையும் பழுதுபார்த்தும் கோயில் முற்றம் கருங்கல் தளவரிசையிட்டும் திருப்பணிகள் பலவற்றையும் முற்றமுடித்து சுமார் ரூ. 2 லக்ஷத்திற்கு மேல் திருப்பணிகள் செய்வித்து 6-9-63 அன்று மகா கும்பாபிஷேகம் செய்வித்தருளினார்கள்.

## 16. சமயப்பணி

உற்சவ காலங்களிலும், ஏனைய சிறப்பு நாட்களிலும் சமயப் பிரசாரங்கள் நிகழ்த்துவிக்கப்பெறுகின்றன. கும்பாபிஷேக காலத்தில் தல வரலாற்றினைச் சுருக்கமாக அறிந்து கொள்ளும் வண்ணம் "திரிபுரவனத் தல மகிமைச் சுருக்கம்" என்னும் உரைநடை நூல் வெளியிட்டு யாவருக்கும் வழங்கப்பெற்றது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த "சகலகலாவல்லி மாலை"

என்னும் பாராயண நூல் உரையுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. யாத்ரீகர்கள் வசதிக்காகத் தல யாத்திரைப் படங்கள் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

17—2—47இல் முன்னுள் அமைச்சர் P. S. குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் ஹரிஜன ஆலயப் பிரவேச விழா நடைபெற்றது.

## 17. நிர்வாகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் பரிபாலனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களுள் இதுவும் ஒன்று. ஆதீனகர்த்தரவர்களாக எழுந்தருளி இருக்கும் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீன அருளாட்சி ஏற்ற 12-11-71 முதல் இவ்வாலயத்தையும் பரிபாலனம் செய்து வருகின்றூர்கள்.

## 18. கல்வெட்டுக்கள்

இத் திருக்கோயிலில் 7 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளை அரசாங்கக் கல்வெட்டுத் துறையினர் படி எடுத்துச் சென்றுள்ளார்கள். அவைகளின் சுருக்கங்கள் அத்துறையினர் வெளியிடும் ஆண்டு அறிக்கையில் (Annual Reports on South Indian Epigraphy) வெளிவந்துள்ளன. அவைகளின் விபரங்கள் 1907 ஆம் ஆண்டைய 189 முதல் 192 முடிய உள்ள கல்வெட்டுக்களிலும், 1911 ஆம் ஆண்டைய

159 முதல் 160 முடிய உள்ள கல்வெட்டுக்களினுலும் 1932 ஆம் ஆண்டைய 61 ஆவது எண்ணுள்ள கல்வெட்டாலும் அறியலாம். இக்கல்வெட்டுக்கள் இவ்வூர்ச் சிவபெருமானுக்கு நித்திய நைமித்தியங்களுக்கு நிபந்தங்கள் அளித்த செய்திகளைப் புலப்படுத்துகின்றன.

$\frac{197}{1907}$ கல்வெட்டிலிருந்து மூன்றுங் குலோத்துங்கனுக்கு வடநாட்டில் பெருவெற்றி கிடைத்தமையும், அங்குக் கிடைத்த பெரும் பொருள்களைக் கொண்டு தாராசுரத்திலும், திருபுவனத்திலும் கோயில்கள் கட்டினமையும், அவைகள் அவனது முன்னேர்கள் கட்டிய கங்கைகொண்டசோழபுரம், தஞ்சை கோயில்களை ஒத்ததாகவே கட்டப்பட்டமையும் தெரியவருகிறது.

இம் மன்னனுடைய ஞானகுரு சித்தாந்த இரத்தினகரத்தின் ஆசிரியராகிய ஸ்ரீ ஸ்கந்தசம்புவினுடைய மகனுகிய ஈஸ்வரசிவனுவார். இவரால் இக்கோயில் ஆவாகனம்செய்யப்பட்டது இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பெயர் திரிபுவனஈச்சரமுடைய மகாதேவர் ஆகும். இம்மன்னனுக்குத் திரிபுவன வீரதேவன் என்னும் பட்டப்பெயர் உண்டு. அப்பட்டப்பெயரை ஒட்டி இம்மன்னன் இவ்வூருக்குத் திரிபுவன வீரபுரம் என்று பெயர் வைத்துள்ளான்.

மற்ருெரு கல்வெட்டில் பாண்டிய அரசன் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியதேவருடைய ஆட்சி பத்தாவது ஆண்டில் திரிபுவன வீரபுரத்திலுள்ள ஊர்க் குடிமக்களுக்கும் அவ்வூர்க்

காவல் பாத்தியமுள்ள குலமங்கல நாட்டினர்க்கும் நடந்த ஓர் ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. கள்ளர் மக்களின் திருமணம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு புடவை கொடுக்க வேண்டியதென்றும், அவர்கள் இவ்வூர் மக்களிடம் நியாயவழி தவறி நடக்கக் கூடா தென்றும், துன்புறுத்தக்கூடாதென்றும், அந்தச் சேலை யும் முதல் திருமணத்திற்குத்தான் கொடுக்கப்படுமென் றும் முடிவு செய்யப்பட்டதாக அறிவிக்கின்றது.

மற்றொன்றில் சென்னை பெருமாள் என்ற குலோத் துங்கசோழவரையன், அந்நாட்டுத் தலைவன் உடையார் குலசேகரதேவரென்ற உபாகாராயன் முன்னிலையில் மேற்போந்த ஒப்பந்தத்தை முடிவு செய்து கொண்டான் எனத் தெரியவருகின்றது.

1 ஶுசகாதாநந்தாயாம் ஸகலஶிரஸி
டஸ்ஸம்ஹாரந்து ஸிம்ஹளேந்த்ராத்
யோ தேஜஸ்வீ கௌரவேஶம் விதரஸாகரதீம்
யோ தயீஸ வீரபாண்ட்ய: ।
யோ வா வீராபிஷேகம் வ்யதநுத மதுராம்
பாண்ட்யராஷ்ட்ரம் ஜயித்வா
ராஜா த்ரைலோக்யவீரஸ்ஸ விஜயதே
ஶ்ரீ குலோத்துங்கசோள: ॥

2 விஶ்வம்பரா யஸ்ய ஸபாஜநாபாம் ஸமேதாவ
வஸுதாம் பரிவாரபாண்ட்யா: ।

[illegible]

3 [illegible]

4 [illegible]

5 [illegible]

6 [illegible]

ப்ராகாரஹர்ம்யம் ச விமாநகேஹம் ததைக
ஹஸ்தா ததாத்வே நரேந்த்ர: ॥

7 ஸங்காதேஶ்வர திவ்யாத தயாரா
ஸாமாஹஸ்வ்யாமயம்
ஶ்ரீதத்யாஜஸ்தயாத யாத ச தமா
ஶ்ரீ ராஜராஜேஶ்வரஸ் ।
ஸஶ்ரீகேஶ்வரவேஶ்வவேதி நிவிஷ்டம் நிதாய
கேஹம் ந்ருபோ
ஸஶ்ரீகாயிவேதஶ்காஶ ச ஸஹாம்
திவ்யாம் தஹக் மஹாவாரஸ் ॥

8 ஜிஹ்வா வஸ்த்ம் த்ரிஸ்தாநவீரஶ்ரதாரத்ரம்
வக்ரஸ்ராநம் த்ரிஸ்தாநவீரஶ்வரதேதஷ் ।
நாநாஹத்யப்ரகுதிதஶோஹ: வஹாரம்ப்யம்
கேஹகோத்ரம்ம ப்ரவரவிதாநஸ்ஶிதாகர: ॥

9 ஶ்ரீகண்டமஹாநதநயேந வதிம் ந்ருபாணாம்
பாணஸ்யாபி ரீஶ்வர...பவேநத:
பாதேஶ்வரேண மஹாராணா ஸ்தாநவஸ்யவிசேத்ரா
மேஹாதகாரயதவல பவியோ: ப்ரதிஷ்டாம் ॥

10 விஜ்யாயேந தத்ஷிணா நிகஷிதா
விஶ்வஷ்ததஷ்டாதம



ஸ்ரீ சரபர்

𑌸𑍍𑌥𑌾𑌣𑍋𑌰𑍍𑌯𑍇𑌨 𑌵𑌿𑌕𑍍𑌷𑍁𑌣𑍍𑌣𑌵𑌪𑍁𑌷𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 ।
𑌪𑍋𑌤𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌿𑌵 𑌶𑍈𑌵𑌶𑌤𑍍𑌰𑍁𑌷𑍍𑌵𑌸𑍍𑌰
𑌸𑌹𑌜𑌾𑌷𑌰𑌤𑍍𑌰𑌾𑌕𑌰𑍋
𑌰𑌾𑌜𑍇𑌨 𑌟𑌸𑍍𑌯 𑌮𑌾𑌰𑍍𑌲𑍍𑌵 𑌰𑌂𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌵𑌃
𑌕𑌣𑍍𑌠𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌮𑌾𑌰𑍍𑌣𑌃 ॥

# சரபமூர்த்தி

**यो घोरं वेषमास्थाय शरभाख्यं महेश्वरः ।**
**नृसिंहं लोकहन्तारं संजघान महाबलः ॥**

என்பது சரபோபநிஷத் ஹிரண்யகசிபு என்ற அசுரனால் துன்பமடைந்த அவனுடைய மகன் பிரஹ்லாதனைக் காக்க நரசிங்க வடிவுடன் தூணிலிருந்து தோன்றினார் திருமால். அசுரன்பெற்ற வரத்திற்கேற்ப மாலை வேளையில் வாயிற் படியில் தன் தொடைகளில் கிடத்தி நகங்களால் கீறி இரத்தத்தைப் பருகினார். இரத்தபானத்தால் மதங் கொண்டார். அசுரனைக்கொல்ல மேற்கொண்ட கோபமும் தணியவில்லை. மதத்தினால் கோபத்துடன் ஹூங்காரம் செய்யும் திருமாலைச் சாந்தப்படுத்த அணுகுவதற்கே அமரர் யாவரும் அஞ்சினர். தேவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவபெருமான் சரபரூபத்துடன் தோன்றினார். நரசிங்கத்துடன் பதினெட்டு நாட்கள் போரிட்டார். தேவர்கள் வேண்டியபடி திருமாலைக்கொல்லாமல் தோலை உரித்து ஆடையாக அணித்தார் என்பது புராணவரலாறு.

சரப பக்ஷியாகச் சிவபெருமான் தோன்றியவுடனேயே சிவனென உணர்ந்த நரசிங்கம் அவருடன் போரிடாமலேயே சிவனுடன் ஐக்யமானுர் என்றும் ஒரு புராணம் கூறும்.

இந்த வரலாறு ரிக்வேதத்தில் மிகவும் ஆராய்ந்து அறியும்படி குறிப்பாகக் காட்டப்படுறது शरभाय ऋषिबन्धवे என்ற வாக்கியத்தினுல். ஆனுல் யஜுர்வேதத்திலோ கொஞ்சம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

हरिं हरन्तमनुयन्ति देवाः ।
विश्वस्येशानम् ऋषभ मतीनाम् ॥

சகல தேவர்களின் புத்தியை பிரேரணை செய்பவரும் ஹரியை அபஹரித்துச் செல்பவரும் உலகத்திற்குத் தலைவனுமாகிய சிவபெருமானைத் தேவர்கள் பின்தொடர்ந்து வேண்டினர். இந்த யஜுர்வேத ஆரண்யக மூன்ரும் பிரச்னத்திலுள்ள வாக்கியம் புராணத்தில் காணப்படும் வரலாற்றின் சாரத்தைக் கூறுகிறது.

அஷ்டோத்தர சதோபநிஷத்துக்களில் சரபோபநிஷத் என்பதும் ஒன்று. அதில் योघोरं என்று தொடங்கி நான்கு மந்திரங்களில் மேற்கூறிய வரலாறு சுருக்கமாகக் கூறப்படுகிறது. மேலும் பிரமனின் சிரங்கொய்தல், பஞ்ச கிருத்தியம் செய்தல், காலனைக் காலால் உதைத்தல், காமனைக் கண்ணுல் எரித்தல், தன்னுடைய கண்ணுகிய தாமரையால் அர்ச்சித்தல் ஷ்ணுவுக்கு சக்கரமளித்தல். தடங்கலற்ற நிக்ரஹ அனுக்கிரஹ சக்தியைப் பெற்றிருத்தல் முதலிய சிவபரத்வ ஸாதகமான பல ஏதுக்களைக்கூறி அவனுக்கு வணக்கம் கூறுகிறது. சரப என்ற பதத்திற்கும் பொருள் உரைக்கப் படுகிறது.

**शरा जीवास्तदङ्गेषु भाति नित्यं हरिः स्वयम् ।**
**ब्रह्मैव शरभः साक्षान् मोक्षदोऽयं महामुने ॥**

துன்பங்களை அநுபவித்தலின் ஜீவன்கள் சரமெனப் படுவர். திருபுரஸம்ஹார காலத்தில் திருமால் சிவனுக்கு அம்பாக இருந்தமையால் சரம் என்பது அம்பாகிய திருமாலையும் உணர்த்தும். ஸகல ஜீவன்களும், அம்பாகிய மாலும் சிவனிடத்தில் விளங்குகின்றமையால் ( **भाति** - விளங்குகிறது ) மோக்ஷமளிக்கும் பரம்பொருளே சரப என்ற சொல்லால் உணர்த்தப்படும்.

வேதம் உபநிஷத் இவைகளில்மட்டுமின்றிப் புராணங்களில் விரிவாக இந்த வரலாறு சொல்லப்படுகிறது. சரப மூர்த்தியின் திருவுருவம் காஞ்சிப் புராணத்தில்

" நன்றுவிரண்டு திருவடியு நனிநீள்வாலு
முகமிரண்டுங்
கொன்னர் சிறகு முருத்திரமுங்
கொடும்பேரார்ப்பு மெதிர்தோற்றிச்
செந்நீர் பருகிச்செருக்கு நர
மடங்கலாவி செகுத்துரிகொண்
டொன்னர் குலங்கண் முழுதழிக்கு
முடையான் சரபத் திருவுருவம் "
( சிவபுண் - 32 )

எனவரும்.

பிர்மாண்ட புராணத்தில் கௌரீமாயூர க்ஷேத்திர மாகாத்மியம் உள்ளது. அதில், 59, 60 ஆவது அத்தியாயங்களில் சரபஸ்வரூபம் கூறப்படுகிறது. கீழே நான்கு கால்கள் மேலே நான்கு கால்கள் ஆக எட்டுக் கால்களும் நான்கு திருக்கரங்களும் உடையவர். (சில புராணங்களிலும் தியான சுலோகங்களிலும் ஆயிரம் கையுடையவர் என்றும்

சொல்லப்பட்டிருக்கிறது) பக்ஷியின் அங்கமாக அலகும், இறக்கைகளுமுடையவர். விலங்கின் அங்கமாக வாலுடையவர். ( நரியின் வால் போன்ற வாலுடையவர் என்றும் ஒரு தியான சுலோகம்) கூர்மையான நகங்களேயும், கோரைப் பல்லேயுமுடையவர். சந்திரன், சூரியன், அக்னி என்ற மூன்று திருக்கண்ணுடையவர். சந்திரப்பிறையணிந்த சடையுடையவர். ஊழிக்காலத்து மேகம்போல் பெரிய கூச்சல் உடையவர். மின்னற் கொடிபோன்று ஒளிவீசும் உடலேயுடையவர். தூக்கிய காதும், கருத்த கழுத்தும் பயங்கரமான துடிக்கும் நாக்குமுடையவர். காளியும் துர்க்கையும் இரு இறகுகள். இருதயத்தில் பைரவரும் வயிற்றில் பாடவாக்கினியும், தொடைகளில் வியாதியும் மிருத்யுவும் உடையவர். புயல் காற்றினும் கடுகிய வேக முடையவர். தலேயில் கங்கையும் கிரீடமும் கொண்டவர். தொடையில் கிடத்திய நரசிங்கமுடையவர். இவ்விதமாகச் சரபரூபம் கூறப்படுகிறது. மந்திரயந்திர பேதங்களுக்கு ஏற்றவாறு சிற்சில மாறுபாடுகளும் உருவத்தில் கூறப் பட்டிருக்கின்றன.

பிர்மாண்ட புராணத்திலே நரசிங்கம் சரபமூர்த்தியைத் துதிப்பதாக ஒரு அஷ்டோத்திரசதநாம ஸ்தோத்திரம் உள்ளது. அதிலுள்ள நாமங்கள் பெரும்பாலும் மகாமந்திர மாகிய ஸ்ரீ ருத்திரத்தில் உள்ளபடி இருக்கின்றன.

**अतः प्रदोषे शिव एक एव पूज्योऽथ नान्ये हरिपद्मजाद्याः** பிரதோஷ காலத்தில் சிவன் ஒருவனே பூசிக்கத்தக்கவன். மற்ற விஷ்ணு, பிர்மா முதலியோர் பூசிக்கத் தக்கவர் இல்லே என்ற வாக்கியத்திற்கு அபவாதமாக **न प्रदोषे हरिं पश्ये-न्नृसिंहं राघवं विना** பிரதோஷ காலத்தில் நரசிம்மனேயும், ராகவனேயும் தவிர விஷ்ணுவைப் பார்க்கலாகாது என்று காணப்படுகிறது. பிர்மாண்ட புராணத்தில் **शिवांशो**

**नृहरिः सेव्यः प्रदोषेष्वप्यमेश्वरः** பிரதோஷ காலத்தில் நரசிம்மன் பூசிக்கத்தக்கவர் என்று கூறியுள்ளது. மேலும் ஸ்காந்த புராணத்தில்

**हरिँ हरन्तं शरभं विश्वस्येशानमीश्वरम् ।**
**अनुयान्ति सुराः सर्वे नमो वाक्यैः सहद्रुतम् ॥**

என்று யஜுர்வேதத்தில் உள்ளது போலவே சொல்லப்படுகிறது. மேலும் **शूलायुधाय सुरवृन्दकमौलिमाला लीलायमानचरणाम्बुजपल्लवाय । हेलावलेप परिभूतनृसिंहरंहो लीलापराय शरभाकृतये नमोऽस्तु** என்ற தொடக்கமுள்ள பல துதிகளும் உள்ளன.

ந்ருசிம்ம புராணத்தில் **तन्नृसिंहशिरो यावन्नखैश्छेत्तुं समुद्यतः** (நரசிங்கத்தினுடைய தலையை நகங்களால் எப்பொழுது கொய்ய முயன்றுரோ) என்று தொடங்கித் தேவர்களின் வேண்டுகோளும் ஈசன் அதற்கு இசைந்து அருள் பாலித்ததும் கூறப்படுகிறது.

காசிகண்டத்தில்:— **पुरा हिरण्यकशिपुं दैत्यराजं महाबलम् । हत्वा तद्रुधिरापान प्रमत्तं याचितः सुरैः । रुद्रः शरभरूपेण नरसिंहमपीडयत्** என்று தொடங்கி இவ்வரலாறு காணப்படுகிறது. <u>சிவபராக்கிரமத்தில்</u> சிவபெருமானுடைய அஷ்டாஷ்ட (64) மூர்த்தங்களைப்பற்றிக் கூறுமிடத்து முப்பதாவதாக ஸிம்ஹக்ன மூர்த்தி கூறப்படுகிறது.

<u>சாரதாதிலகம்</u>, மந்திரமஹார்ணவம் முதலான மந்திர சாஸ்திரங்களில் சிற்சில மந்திரங்களும், அவற்றிற்குரிய ரிஷி சந்தஸ்தியானம் கரந்யாசம், அங்கந்யாசம் இவை கூறப்படுகின்றன. ஆயினும் சரபமூர்த்தியின் மந்திரங்

களையும். யந்திரங்களையும், தியானங்களையும் புரச்சரண முறைகளையும் விரித்துக் கூறுவது ஆகாசபைரவ கல்பம். இதில் பல துதிகள் உள்ளனவாயினும், அவற்றுள் சரபாஷ்டகம், தாருணா சப்தகம், சரப புஜங்கப்ரயாதம் என்ற மூன்று துதிகளும் போற்றத்தக்கனவாக அமைந்துள்ளன. பிர்மாண்ட புராணத்திலும் சரபஸ்துதிகள் உள்ளன. அதிலும் சரபாஷ்டகம் (முன்னதைக் காட்டிலும் வேறு வகையானது) சிறப்பாக உள்ளது.

சரப மந்திரங்கள் சத்ருக்களை அழிப்பதில் ஒப்புயர்வற்றனவாக உலக வழக்கத்தில் கூறப்படினும், சாந்தி, வசீகரணம், ஸ்தம்பனம், வித்வேஷணம், உச்சாடனம், மாரணம் என்ற சத்ருஜயத்திற்குத் தேவையான ஷட்கர்ம விதானத்தைத் தவிர பிள்ளைப்பேறு, பிணி நீக்கம், பிசாசு முதலியவற்றின் நிவர்த்தி முதலிய பயன்களைக் குறித்தும் யந்திரங்களும் அபிஷேக முறைகளும் பலி முறைகளும் கூறப்படுகின்றன.

அபிஷேகம் :- நன்கு அலங்கரிக்கப்பட்ட கும்பத்தில் சரபமூர்த்தியை ஆவாஹனம் செய்து ஷோடசோபசாரத்துடன் பூஜித்து அருகம்புல் அல்லது விக்வாமித்ரம் (ஒருவகையான தர்ப்பம்) இவைகளால் கும்பத்தைத் தொட்டுக்கொண்டு தோஷத்திற்குத் தக்கவாறு 100 அல்லது 1000 ஆவர்த்தி சரபமூலமந்திரத்தை ஜபிக்க வேண்டும். பின்பு அந்த நீரை அபிஷேகம் செய்ய வேண்டும். மூன்று நாள் அபிஷேகம் செய்தால் சிறு நோய்களும், ஐந்து நாள் செய்தால் வாதரோகம் வாதசூலை முதலியனவும் மூன்று மாதம் செய்தால் பிசாசுகளின் பீடையும், ஒருவருஷம் செய்தால் காக்கை வலிப்பு, க்ஷயரோகம் முதலிய பெரும் நோய்களும் நீங்கும்.

இந்த அபிஷேகத்துடன் ரக்ஷையும் கட்டினால் மலட்டு தோஷமும் நீங்கும்; ஜன்ம வந்திக்குப் பத்து நாட்களும்,

காசு வந்திக்குப் பன்னிரண்டு நாட்களும், மிருத வந்திக்குப் பதினாறு நாட்களும் அபிஷேகம் செய்யவேண்டும். ஈயம் ஆறுமாதமும், செம்பு ஒருவருஷமும், மூன்று உலோகம் ஒன்றரையாண்டும், வெள்ளி மூன்று ஆண்டும், பொன் ஆயுள் உள்ள வரையிலும் வீர்யமுடையதாக இருக்கும். ஆதலின் செல்வத்திற்கும், தோஷத்திற்கும் தக்கபடி ஒரு உலோகத்தால் ரக்ஷை செய்து கட்டவேண்டும். இந்த ரக்ஷையை அணிந்தவர்கள் ஆறு மாதம் வரையில் நதியைத் தாண்டலாகாது. வெள்ளிக்கிழமைகளில் ஸ்நானம் செய்து தூபதீபம் காட்டவேண்டும் காகத்திற்குப் பலியிடலும் அந்தணர்களுக்கு அன்னமளித்தலும் வேண்டும்.

பலியிடல் :- சுத்தமான பூமியில் பலியை வைத்து பூமியைக்கையால் தொட்டுக்கொண்டு தேவதைகளை அழைக்க வேண்டும். பிறகு அந்த பலியைக் காகங்கள் உண்ணும் பொழுது பிண்டம் உடையும் நிலை, கூறுகள், அக்கூறுகள் விழுந்த நிலை இவற்றைக்கொண்டு இத்துணைக்காலத்தில் இவள் இன்ன மகவு பெறுவாள் என்பன போன்ற பல சகுனங்களும் கூறப்படுகின்றன.

ஆசார்யனுடைய அருளின்றி மந்திர யந்திரங்கள் பலனளிக்கமாட்டா. ஆதலின் தேசிக ஸ்தோத்திரம் என்று ஒரு துதி ஆசார்யனை சரபமூர்த்தியாகப் பாவித்து எழுதப் பட்டிருக்கிறது. மேலும் ஆகாச பைரவ கல்பத்தில் சரப மூர்த்தியின் கவசம் ஒன்று மற்ற கவசஸ்தோத்திரங்களைப் போலவே ஈசனின் ஒவ்வொரு ரூபநாம பேதங்களைக்கூறிக் காக்கவேண்டும் என்று பிரார்த்திப்பதாக உள்ளது. அகாராதி அக்ஷராந்தமான ஐம்பத்தொரு அக்ஷரங்களுக்கும், தேவதை, நிறம், ஸ்வரூபம் இவை சொல்லப்படுகின்றன.

சரப மூர்த்திக்குத் தனியாக பீஜாக்ஷரங்கள் நிரம்பிய ஒரு சகஸ்ர நாம ஸ்தோத்திரமும் உள்ளது.

சில மந்திரங்கள் :

शालुवेशाय विद्महे पक्षिराजाय धीमहि ।
तन्नो रुद्रः प्रचोदयात्

சரப காயத்ரீயான இம்மந்திரத்தை ஜபம் செய்பவர்களுக்குக் கனவிலும் பாம்பு பயம் இல்லை என்று விசேஷமான பலன் கூறப்படுகிறது.

மந்திரங்களை மட்டும் ஜபிப்பது அதிக விரைவில் பயனளிப்பதில்லை. ஆதலின் யந்திரம், புரச்சரணம் இவைகளும் இன்றியமையாது வேண்டப்படுவன. மேலும் மந்திரங்களுக்கு ரிஷி சந்தஸ், அங்கந்யாஸம், கரந்யாஸம், தியானம் இவைகளை அறிந்து ஆசார்யனிடம் உபதேசம் பெற்றே மந்திரங்களை ஜபிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

## 19. திருப்பாடல்கள்

வடமொழியில் எழுதப்பெற்றுள்ள தல புராண ஏட்டுப் பிரதி ஒன்று கிடைத்திருக்கிறது. அது தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பெற்றிருக்கிறது. தேவாரப் பாடல்கள் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் சில பொதுப் பாடல்கள் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே.

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

நிரவொலி வெள்ளமண்டி நெடுவண்டமூட நிலநின்றுதம்ப மதுவப்
பரமொரு தெய்வமெய்த விதுவொப்பதில்லை இருபாலுநின்று பணியப்
பிரமனு மாலுமேலை முடியோடுபாத மறியாமைநின்ற பெரியோன்
பரமுத லாயதேவர் சிவனாயமூர்த்தி அவனாநமக்கொர் சரணே.

தடமல ராயிரங்கள் குறைவொன்றதாக நிறைவொன்று
தன்கணதனுல்
உடன்வழி பாடுசெய்த திருமாலையெந்தை பெருமானுகந்து
மிகவும்
சுடரடி யான்முயன்று சுழல்வித்தரக்கன் இதயம்பிளந்த
கொடுமை
அடல்வலி யாழியாழி யவனுக்களித்த அவனே நமக்கோர்
சரணே.

கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்
போக்கித்
தெள்ளியே னுகிநின்று தேடினே னடிக்கண்டேன்
உள்குவா ருள்கிற்றெல்லா முடனிருந் தறிதியென்று
வெள்கினேன் வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே.

வெள்ள நீர்ச் சடையனுர்தாம் வினவுவார் போலவந்தென்
உள்ளமே புகுந்துநின்ருர்க் குறங்குநான் புடைகள்போந்து
கள்ளரோ புகுந்தீரென்னக் கலந்துதா னேக்கிநக்கு
வெள்ளரோ மென்றுநின்ருர் விளங்கிளம் பிறையனுரே.

விளக்கினுர் பெற்றவின்ப மெழுக்கினுற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னுர்க் கடிகடா மருளுமாறே.

வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்துவைத் துலையை யேற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற ஆமைபோற் றெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றே னென்செய்வான் தோன்றி
னேனே.

முழுத்தழன் மேனித் தவளப் பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பரஞ் சோதியை யெங்கள்பி ரானை யிகழ்திர்கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு வானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம் மாற்றெழுவிக்குந்தன்
தொண்டரையே.

பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போம்
இருங்கடன் மூடி யிறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணான் களேபர முங்கொண்டு கங்காளராம்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே.

மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசன் எனுங்கனி
இனிது சாலவு மேசற்ற வர்கட்கே.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

பாறுதாங்கிய காடரோபடு தலையரோமலைப் பாவையோர்
கூறுதாங்கிய குழகரோகுழைக் காதரோகுறுங் கோட்டிள
ஏறுதாங்கிய கொடியரோசுடு பொடியரோவிளங் கும்பிறை
ஆறுதாங்கிய சடையரோநமக் கடிகளாகிய அடிகளே.

ஒன்றிநீர்கள் வந்துறைமினோ நுமக்கிசையுமா நினைந்
தேத்துவீர்
குன்றிபோல்வதோ ருருவரோகுறிப் பாகிநீறுகொண்
டணிவரோ

இன்றியேயில ராவரோவன்றி யுடையராயில ராவரோ
அன்றியேமிக அறவரோநமக் கடிகளாகிய அடிகளே.

இறைவ னென்றெம் பெருமானை வானவ ரேத்தப்போய்த்
துறையொன் றித்தூ மலரிட் டடியிணை போற்றுவார்
மறையன்றிப் பாடுவ தில்லை யோமல்கு வானிளம்
பிறையன்றிச் சூடுவ தில்லை யோஎம் பிரானுக்கே.

தாருந்தண் கொன்றையுங் கூவி ளந்தனி மத்தமும்
ஆரு மளவறி யாத ஆதியும் அந்தமும்
ஊருமொன் றில்லை உலகெ லாம்உ கப் பார்தொழப்
பேருமோ ராயிரம் என்பரால் எம்பி ரானுக்கே.

திருச்சிற்றம்பலம்

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாம் தொழ
வேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சாய்
உருகாதா லுடம்பெல்லாங் கண்ணாய் யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே.

திருச்சிற்றம்பலம்

—மாணிக்கவாசக சுவாமிகள்

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண் ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

—திருமூலர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

—உமாபதிசிவம்

சிவமயம்

# பார்வையாளர் குறிப்புகள்

திருபுவனக்கோயில் என் கருத்தைக் கவர்ந்தது. தூய்மையும் கலையழகும் நிறைந்த சூழ்நிலை தெய்வ சிந்தனையை வளர்க்கப் பயன்படுவதல்லவா! நிர்வாகிகளின் அன்பும் என் கவர்ச்சியை அதிகப்படுத்தியது. இவைநெறி வளர்க்கும். இக்கலைக்கோயில் அருள்நெறி உள்ள காலம் வரை நிலைபெறுவதாக.

ம. பொ. சிவஞானம்

17—3—62.

கம்பகரேஸ்வரரின் கிருபையால் நாங்கள் இப்புனித தலத்தைத் தரிசிக்க முடிந்தது. எங்களுடைய பிரயாண திட்டத்தில் திரிபுவனம் வருவது என்று இருக்கவில்லை. தருமபுர மகாசந்நிதானத்தின் திருக்கட்டளையின்படி திருபுவனத்தைத் தரிசிக்க எங்களுக்கு வாய்ப்பு நேரிட்டது. ஆலய நிர்வாகத்தினரின் அன்பாலும் உதவியாலுமே நாங்கள் சுவாமி தரிசனம் இலகுவாகச் செய்ய முடிந்தது. ஓர் இரவு தேவஸ்தான விடுதியில் தங்கியிருந்தோம். நிர்வாகத்தினரின் அன்பும் உபசாரமும் மறக்கமுடியாதது. அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

ந. பாலசுப்பிரமணியம்,
முதலாவது காரியதரிசி,
இலங்கை ஸ்தானிகராலயம்,
புது டில்லி.

10—3—63.

1963-ம் வருஷம் ஏப்ரல்மீ 11ஆம் தேதி வியாழக்கிழமை ஆண்டவனைக் குடும்பத்துடன் தரிசித்து ஆனந்தித்தேன். கோயில் வெகு அழகாகவும் நல்ல நிலையிலும் தருமபுர ஆதீனத்தின் வழக்கப்படி வைக்கப்பட்டிருக்கிறது. பக்தர்களை ஆதரிப்பதில் மிகுந்த பரிவு காட்டப்பட்டது மதிப்பிற்கு உரியது. எல்லாம் ஆண்டவன் திருவிளையாடல்.

ஆர். நரஸிம்மன்,
ஜில்லா செஷன்ஸ் நீதிபதி,
11—4—63. மேலத்தஞ்சை.

இன்று 1963ம்வருஷம் ஜுன்மாதம் 6ஆம்தேதி அடியேன் குடும்பத்துடன் இறைவனைத் தரிசித்து ஆனந்தம் அடைந்தேன். கோயில் திருப்பணி சிறந்த முறையில் நடைபெற்றுவருகிறது. திருக்கோயில் நல்லமுறையில் சாஸ்திரப்படி நடைபெற்று வருகிறது. கோயில் சிப்பந்திகள் பக்தர்களை அன்போடு நல்ல முறையில் வரவேற்று சுவாமி தரிசனம் செய்விக்கின்றார்கள். அவர்களுக்கு அடியேனுடைய பாராட்டும் நன்றியும உரித்தாகுக.

K. கமலக்கண்ணன் M. L. C.
6—6—63. (Ex. Mayar of Madras)

இன்றிரவு இத்திருக்கோயிலுக்கு வந்து அம்மையப்பனை வழிபடும் வாய்ப்பைத் திருவருள் கூட்டிவைத்தது. அண்மையில் குடமுழுக்கு நடைபெற்றது. யாங்கணும் இறைவன் ஒளி வீசுவதைக் கண்டு மெய்மறந்தேன். கோயிலைச் சார்த்தவர்கள் கோயிலைத் தூய்மையாக வைத்திருப்பதோடு வழிபட வரும் அன்பர்களுக்கு எல்லா வசதிகளையும் அளிக்க முயல்வது பாராட்டுக்குரியது.

சி. வடிவேல்,
24—9—63. Madras Educational Service.

குடும்பத்துடன் இத்திருத்தலத்தை வழிபட எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதைச் செவ்வையாக இன்று பார்த்துப் பயனடைய இவ்வாட்சியாளர்கள் பெரிதும் உதவியமைக்கு எங்கள் நன்றியும், பாராட்டும். இத்தலம் நல்ல முறையில் புனிதமாகப் பரிபாலிக்கப்பட்டு வருவது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகிறது.

நஞ்சப்பன்,

20—10—66. *சப் ஜட்ஜ், திருச்சி.*

தமிழ்நாடு தெய்விகப் பேரவை – திருவண்ணுமலை நகரச்சங்க உறுப்பினர், ஐம்பது அடியார்கள் திருத்தல யாத்திரைப் பயணத்தில் இன்றையதினம் மிகப் பெரும் பாக்கிய நன்ணுளாகும். தருமை ஆதீனத்தில் பல தேவால யங்களையும் தரிசித்து வருகிறேம். தருமை ஆதீன நிர்வா கத்தில் நடைபெற்று வரும் தேவாலயங்கள் புனிதமாக தெய்வசாந்நியம் பெற்று விளங்குவது மற்ற தேவாலயங் களின் நிர்வாகஸ்தர்கள் பின்பற்றக்கூடிய எடுத்துக் காட்டாகும்.

இந்த ஆலயம் எங்கள் குழுவினரை மிகவும் கவர்ந்தது. இதை விட்டுப்பிரிய மனமில்லாமலேயே பிரிகின்றேம். ஆதீன அலுவலர்கள் எங்களை மிக்க அன்போடு முக மலர்ந்து வரவேற்று உபசரித்ததற்கு எங்கள் இதயபூர்வ மான நன்றி. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானங்களின் திருவடிக்கு வணக்கம் செலுத்தி விடைபெறுகின்றேம்.

இராமநாதஸ்வாமிகள்,

*தலைவர்,*

20—11—67. *ஈசான்யமடம், திருவண்ணுமலை.*

இன்று மாலை குடும்பத்துடன் சரபேந்திரர் தரிசனம் திருபுவனத்தில் கிட்டியது. கிருத்திகை நாளாகையால்

ஸ்ரீ முருகனுடைய சந்நிதானத்தில் நன்றாக அர்ச்சனையைப் பார்க்கும் பேறுபெற்றோம்.

எப்போதும்போலக் கோயில் சுத்தமாகவும் அழகாகவும் இருந்தது. கோயில்கள் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு முன் உதாரணமாகத் தருமபுரத்து மடத்தின் கோயில்கள் அமைத்துள்ளன. இறைவன் அருளால் எல்லா நலனும் விளங்கப் பிரார்த்திக்கிறேன்.

19—3—71. நா. மகாலிங்கம்

சரபர் சன்னிதிக்கு வருகின்ற வாய்ப்பு எனக்கும் என் குடும்பத்திற்கும் கிட்டியது. சரபர்சிலை ஆச்சர்யத்தையும் அதிசயத்தையும் காட்டிநிற்கும் காட்சி என்மனதில் பதிந்துவிட்டது. ஆலயத்தின் அமைப்பும், அழகுற வடித்துள்ள சிற்பங்களும் தமிழகத்தின் பண்பின் சிகரமென விளங்குகின்றன. மற்ற ஆலயங்களைப்போல் தருமை ஆதீனம் ஆலயத்தினைக் கண்ணுங் கருத்துமாகப் பேணி, போற்றி, வைத்திருக்கும் முறை போற்றுதற்குரியது.

பு ரா. கோகுலகிருஷ்ணன்,
11—6—72. நீதிபதி, உயர் நீதிமன்றம்,
தமிழ்நாடு.

சரபேசுவரர் மூர்த்தியின் தரிசனம் கிடைக்கும் வாய்ப்பு கிட்டியமை குறித்துப் பெரிதும் உவகை அடைந்தேன். ஆலயம் மிகத் தூய்மையாகவும் துப்புரவாகவும் இருப்பது பாராட்டத்தக்கது. அகத்தூய்மையும் புறத்தூய்மையும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உதவிடும் என்பதை இதுபோன்ற ஆலயங்கள் வலியுறுத்துகின்றன.

ஏ. என். சிவராமன்,
3—9—72. ஆசிரியர், தினமணி,

தருமையாதீனம்

திருபுவனம் தேவஸ்தானத்திலிருந்து

# பிற நிறுவனங்களுக்கு

## உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ள விபரம்.

( 1945 முதல் - 1972 வரை )

### 1945

| | ரூ. | பை. |
|---|---|---|
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 605 | 12 |

### 1946

| | | |
|---|---|---|
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 450 | 00 |
| ,, பல்கலைக் கல்லூரி | 500 | 00 |

### 1947

| | | |
|---|---|---|
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 624 | 00 |
| ,, பல்கலைக் கல்லூரி | 500 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 60 | 00 |
| தஞ்சை மருத்துவ மனை | 1000 | 00 |
| சென்னை - தமிழ்க் கலைக்களஞ்சியம் புதைபொருள் மாநாடு | 950 | 00 |

### 1948

| | | |
|---|---|---|
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 1369 | 00 |
| ,, பல்கலைக் கல்லூரி | 500 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 966 | 00 |

### 1949

| | | |
|---|---|---|
| தருமையாதீனம் சமயப்பிரசாரம் | 1035 | 00 |
| ,, வேதசிவாகம தேவார பாடசாலை | 1467 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 500 | 00 |

## 1950

| | ரூ. | பை. |
|---|---|---|
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 1728 | 25 |
| ,, பல்கலைக் கல்லூரி | 750 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 947 | 25 |
| ,, ஞானபுரீஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் | 571 | 88 |
| தஞ்சை டி. பி. மருத்துவமனை | 1250 | 00 |
| சிலப்பதிகார மாநாடு - ஸ்ரீவில்லிபுத்தூர் பள்ளி நிதி | 5000 | 00 |

## 1951

| | | |
|---|---|---|
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 2065 | 00 |
| ,, பல்கலைக் கல்லூரி | 1000 | 00 |
| ,, சமயப்பிரசாரம் | 1315 | 00 |
| கோவை ராமகிருஷ்ண வித்யாலயா | 500 | 00 |
| சென்னை தமிழிசைச் சங்கம் | 100 | 00 |
| ஓமந்தூர் மருத்துவ மனை | 750 | 00 |
| காஞ்சி சித்தாந்த வித்யாலயா | 750 | 00 |

## 1952

| | | |
|---|---|---|
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 1502 | 00 |
| ,, பல்கலைக் கல்லூரி | 1000 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 938 | 00 |
| மாயூரம் காசிவிஸ்வநாதசுவாமி கோயில் திருப்பணி | 10,000 | 00 |
| சிங்கிப்பட்டி மருத்துவ மனை | 200 | 00 |

## 1953

| | | |
|---|---|---|
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 2150 | 00 |
| ,, பல்கலைக் கல்லூரி | 1250 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 1132 | 00 |
| ,, அனுதை விடுதி | 2500 | 00 |

| | ரூ. | பை. |
|---|---|---|
| **1954** | | |
| தருமையாதீனம் வேத சிவாகம பாடசாலை, பல்கலைக் கல்லூரி, அறுவை விடுதி | 7242 | 00 |
| **1955** | | |
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 1575 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 1500 | 00 |
| ,, பல்கலைக் கல்லூரி | 1400 | 00 |
| **1957** | | |
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 1575 | 00 |
| ,, பல்கலைக் கல்லூரி | 1500 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 1400 | 00 |
| **1958** | | |
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 1500 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 1575 | 00 |
| **1960** | | |
| தருமையாதீனம் வேதசிவாகம தேவார பாடசாலை | 1135 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 1500 | 00 |
| **1961** | | |
| தருமையாதீனம் பல்கலைக் கல்லூரி | 1000 | 00 |
| ,, சமயப் பிரசாரம் | 1400 | 00 |
| குடந்தை பாவை மாநாடு | 150 | 00 |
| உய்யக்கொண்டான் கோயில் உதவி | 25,000 | 00 |
| மதுரை மீனாட்சி கோயில் | 3000 | 00 |
| **1962** | | |
| சென்னை சித்தாந்த வகுப்பு உதவி | 100 | 00 |
| தேசீய பாதுகாப்பு நிதி | 1000 | 00 |
| திருவாரூர் திருப்பணி நிதி | 250 | 00 |
| சிதம்பரம் சபாநாயகர்கோவில் | 5000 | 00 |
| மணக்குடி கோயில் உதவிநிதி | 1000 | 00 |

| | ரூ. | பை. |
|---|---|---|
| மதுரை மீனுட்சி கோவில் உதவி | 7500 | 00 |
| திருக்குரங்கணில்முட்டம் கோயில் | 5000 | 00 |
| **1963** | | |
| திருவாரூர் கும்பாபிஷேக உதவி | 500 | 00 |
| **1966** | | |
| தெய்வீகப் பேரவை உதவி | 3289 | 54 |
| **1967** | | |
| உலகத் தமிழ் மாநாடு உதவி | 2500 | 00 |
| தெய்வீகப் பேரவை | 1170 | 00 |
| **1968** | | |
| திருநள்ளாறு கோயில் நிதி | 2000 | 00 |
| காரைக்கால் தருமபுரம் கோயில் | 1000 | 00 |
| தருமையாதீனம் சமயப் பிரசாரம் | 300 | 00 |
| **1969** | | |
| இராஜராஜசோழன் விழாமலர் | 100 | 00 |
| திருவாரூர் கலைக் கல்லூரி | 20,000 | 00 |
| **1970** | | |
| திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் கோயில் திருப்பணி | 40,000 | 00 |
| இராஜராஜசோழன் விழாமலர் | 100 | 00 |
| வெள்ள நிவாரண நிதி | 300 | 00 |
| பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி | 2000 | 00 |
| **1971** | | |
| தேரழுந்தூர் ஆமருவிப்பெருமாள் கோவில் திருப்பணி | 500 | 00 |
| சிதம்பரம் ஸ்ரீ சிவகாமி அம்மன் கோவில் | 500 | 00 |
| வடபழனி ஆண்டவர் கோவில் | 500 | 00 |
| இராஜராஜசோழன் சிலைதிறப்பு விழா | 250 | 00 |
| முதலமைச்சர் கண்சிகிச்சை முகாம் நிதி | 1000 | 00 |
| தேசிய பாதுகாப்பு நிதி | 3000 | 00 |

# “ ஞானசம்பந்தம் ”

தெய்விகத் திருமரபில், திருக்கயிலாய பரம்பரையில் திருநெறிய தமிழ் வளர்க்கும் தருமையாதீனத்தின் திங்கள் வெளியீடு நமது ஞானசம்பந்தம். மக்கள் ஊனசம்பந்தம் மாற்றி ஞானசம்பந்தம் அளிக்கும் நலமிக்க நல்லேடு! தமிழ் கூறு நல்லுலகம், கடல் கடந்த நாடெல்லாம், முப்பதாண்டு முழுநிலவாய் ஒளிவீசி ஆற்றிய பணிகள் ஆயிரம் ஆயிரம். இன்னும் எத்தனையோ உண்டு; அத்தனையும் கற்கண்டு.

ஞானசம்பந்தம்! ஆயுள் முழுதும் உங்கள் அகந்தேடி வருவதற்கு அன்போடு அழைக்கிறது! ஆயுள் சந்தா அதிகமில்லை - நூறு ரூபாய்!

வசதி படைத்தோர் நூறு ரூபாய் செலுத்தி ஆயுள் உறுப்பினராய் ஆவதற்கு முந்துங்கள்!

ஏனையோர், தவணைமுறையில் ஐம்பதாய், இருபத்தைந்தாய், பத்தாய், திங்கள்தோறும் செலுத்தி ஆயுள் உறுப்பினராய் ஆவதற்கும் இடமுண்டு. உங்கள் உரிமையை மாற்றியமைக்கவோ, மற்றவர்கட்கு நல்கவோ, ஞானசம்பந்தம் நன்கு உதவி செய்யும் பேரருளைப் பெற்றுய்ய நூறு ரூபாய் பெரிதல்ல.

ஞானசம்பந்தம் நல்லோரை அழைக்கிறது! மூல பண்டாரந்தர முனைந்து வருகிறது! ஆயுட்சந்தா செலுத்தி அருள் மிக்க நல்லிதழைப் போற்றிச் சிறப்பீர்! புகழ் பூத்து அருள் பெறுவீர்!

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ( உள்நாடு ) | 4—00 |
| ,, | ( வெளிநாடு ) | 6—00 |


செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் P O.
தஞ்சை மாவட்டம்.